
பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

## தேசியக் கருத்தரங்கம்

# தமிழிலக்கியத்தில் அறம்

**22.02.2017**

ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு



## முதுகலைத் தமிழ்த்துறை


**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி**

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

DST FIST Supported College

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.

16. திருக்குறளில் அறம் 77
செல்வி.ச.பவித்ரா

17. வள்ளுவர் வழங்கும் அறம் 83
செல்வி.க.முத்துச்செல்வி

18. குறள் கூறும் அறம் 88
செல்வி.பா.அபிராமி

19. பழமொழி நானூறில் அறம் 92
செல்வி. வே. பிரீத்திகா

20. பழமொழி நானூறு கூறும் அறச்சிந்தனைகள் 99
செல்வி அ.அம்சலேகா

21. திருமந்திரம், திருக்குறளில் அறம் 104
முனைவர் செ.ரெஜினா

22. சிலப்பதிகாரத்தில் கோவலனின் அறச்செயல்கள் 111
திருமதி பா. பவித்ராஜெகன்

23. மணிமேகலையில் அறம் 115
முனைவர். ஞா.பிரான்சிஸ்கேதரின்

24. மணிமேகலையில் அறம் 122
செல்வி.சே.மெர்லின்மேரி

25. சாத்தனாரின் அறக்கோட்பாடு 127
முனைவர் சி.கௌசல்யா

26. மணிமேகலையில் வாழ்வியல் நெறி 131
முனைவர் ஆ. ஜீனியராணி

27. வளையாபதியில் அறம் 136
முனைவர் சௌ. ஜான்சி ராணி

28. இயேசு காவியம் காட்டும் அறம் 141
அருட்சகோதரி முனைவர் அல்போன்சாள்

29. தேம்பாவணியில் அறச் சிந்தனைகள் 146
சே. சலோமி இராஜரீகம்

30. புதுமைப்பித்தனின் படைப்புகளில்... 151
திருமதி. ஜெ. ஜமுனாராணி

31. பாரதியின் பன்முகப் பார்வையில் அறம் 156
செல்வி பி.சர்மிளா

32. நாட்டுப்புறப்பாடல்களில் பெண்கள் பேணும் அறம் 161
முனைவர். அருட்சகோதரி சகாயலில்லி





33. தலித்திய நாவலில் சமத்துவச் சிந்தனைகள் 167
அ.சகாயமேரி

34. காப்பியங்களில் அறம் 171
முனைவர் கோ. சந்தனமாரியம்மாள்

35. தமிழிலக்கிய வெளியில் பெண்களின் அறம் 177
முனைவர் அ.கா.அழகர்சாமி

36. தேம்பாவணியில் விஞ்சி நிற்பது இல்லற விழுமியங்கள்: ஒரு மீள்பார்வை 184
முனைவர்.இரா.அருணா தேவ்ராஜ்

37. இறையன்பு போதிக்கும் குடும்ப அறம் 189
முனைவர்ஜெ.அருள் இருதயஜெயந்தி

38. அசோகமித்திரனின் அப்பாவின் சிநேகிதர் சிறுகதைகள் காட்டும் அறம் 195
வே. புளோரா பவுலின் மேரி

39. திரிகடுகத்தில் அறச்சிந்தனைகள் 199
திருமதி.செ.லிட்டில் ப்ளவர்

40. இயேசு காவியத்தில் அறச்சிந்தனைகள் 204
முனைவர்.தே.ராஜசீலி

41. சுந்தரகாண்டத்தில் பெண்ணறம் 208
அருட்சகோதரி அ.சவரியம்மாள்

42. வள்ளுவர் வாழ்வியலில் அறம் 213
முனைவர் மா. பாப்பா

43. குறள் கூறும் அறம் 221
செல்வி.த.ஜெயசித்ரா

44. இனியவை நாற்பது கூறும் அறம் 226
செல்வி பா.சுமதி

45. புறநானூற்றில் அறம் 230
செல்வி யுவராணி

46. அறத்தில் சிறந்த விவிலியப் பெண்கள் 234
செல்வி க.ஜுலியட்தேவகிருபை

47. அற இலக்கியம் காட்டும் இல்லறம் 239
இ.சத்தியசீலா

48. அற இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பாடு 244
முனைவர் பெ.கவிதா

அதிக அறிவு கூர்மையுடையவர்கள். என்பதை பாரதியார் வாய்மொழியாக கூறுவது. "இங்குள்ள ஆண்பிள்ளைகள் வேதாந்த விசாரணைக்கும், குமாஸ்தா வேலைக்கும்தான் உபயோகப்படுவார்கள். ராஜ்ய சேஷமத்தைக் கருதித் தைரியத்துடன் காரியம் நிறைவேற்றும் வரை பாடுபடும் திறமை இத்தேசத்துப் புருஷருக்கு மட்டு. சரோஜினி நாயுடு எவ்வளவு தைரியமாகப் பேசுகிறார்கள் பார்த்தீர்களா? உலகத்தில் புருஷரைக்காட்டிலும் ஸ்திரீகள் அதிக புத்திசாலிகள் என்றும், தைரியசாலிகள் என்றும் தோன்றுகிறது"[7].

பெண் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாகச் செய்வதில் கடமை தவறாதவள் என்பதைக் கம்பர் இலங்காதேவியின் வழி விளக்குகிறார். பெண்கள் தமக்குத் துன்பம் வந்துற்றாலும் தம்மைச் சார்ந்தவர்கள் அழிவுறாது காப்பதில் தம் உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்கள் என்பதை உணர முடிகிறது. ஆணுக்குப் பெண் சமமாக வீரத்திலும் வலிமையிலும் சிறந்திருந்தனர் என்பதைக்காட்ட கம்பர் சுந்தரகாண்டத்தில் அநுமனை எதிர்ப்பவர்களைப் பெண்களாகவே சித்தரித்திருக்கிறார். அப்படியென்றால் அவர் காலத்தில் ஆண்களுக்குச் சமமாக பெண்கள் மதிக்கப்பட்டனர்.

பெண்கள் தம் சுதந்திரச் சிறகை விரித்துப்பறக்கத் தொடங்கிவிட்டனர். இனி ஆணின் அதிகாரத்திற்கு அடங்கி, தன்னையே ஒடுக்கி வாழத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுவிட்டனர். போதியகல்வி பெற்றுத், தம் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

எதற்கும் ஆணை நம்பி வாழ்ந்த காலம்போய் தன் ஊதியத்தில் தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் காக்க முடியும் என்ற நிலைக்கு உயர்ந்துவிட்டனர். பெண்கள் தன்மானத்திற்கு இழுக்கு நேரிடும் போதும், அநியாமாகப் பாதிக்கப்படும் போதும் அதை எதிர்த்துப் போரிடத் தயங்கக்கூடாது. ஆண்களைக் காட்டிலும், பெண்களே திறமையானவர்கள், அறிவிற் சிறந்தவர்கள் ஔவையார் போல் அரசியலும் சிறந்தவர்கள். வாருங்கள் பெண்களே சாதனையின் வாயில்களாவோம்.





# 42. வள்ளுவர் வாழ்வியலில் அறம்

முனைவர் மா. பாப்பா
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை,
பாத்திமா கல்லூரி,
மதுரை.

## முன்னுரை

இலக்கியங்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டு தோன்றுபவை. உலக மொழிகளில் இலக்கியங்கள் காடென மண்டிக் கிடக்கின்றன. இவற்றுள் இலக்கியத்தின் தரத்தை பிரான்சிஸ் பேக்கன் என்ற ஆசிரியன் முறைப்படுத்தும்போது "சில இலக்கியங்கள் கற்கத்தக்கன. சில இலக்கியங்கள் கற்று உணரத்தக்கன. சில இலக்கியங்கள் கற்று உணர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தத்தக்கன" என்று குறிப்பிடுகின்றார். இந்த இலக்கிய வரிசையில் திருக்குறளைக் கற்று, உணர்ந்து வாழ்க்கையில் பின்பற்றத்தக்க சிறந்த இலக்கியம் ஆகும். "நூல்கள் கற்கும் முயற்சியை விட எந்த நூலைக் கற்பது? என்று தேர்ந்தெடுப்பதில் வாழ்க்கையில் வெற்றிக்குரிய பகுதி மிகுதியும் அமைந்துவிடுகிறது" என்கிறார் ரஸ்கின். இங்ஙனம் இந்த இலக்கிய வரையறைக்கேற்றவாறு சிறந்து விளங்கும் நூல் திருக்குறள். திருக்குறள் கடவுளை நம்புகிறது. ஆனால் கடவுளுக்காகச் செய்யப் பெற்றதன்று. திருக்குறள் மனிதனை மனிதன் வளர்ப்பதற்காக மனிதனை மையமாகக் கொண்டு செய்யப்பெற்ற நூல். மனிதராகப் பிறந்தோர் பேசுகிற வேற்று எம்மொழியிலும் திருக்குறளைப் போன்றதோர் வாழ்க்கை நூல் இதுவரையில் தோன்றவில்லை.

## வாழ்வாங்கு வாழ்தல்

வாழ்க்கை என்பது நோக்குடையது. பயனுடையது. வாழ்க்கை என்பது தற்செயலாக வந்த ஒன்றன்று. அது தற்செயலாக நீரிற் குமிழிபோல மறைந்த விடுவதுமில்லை. வாழ்க்கைக்கு அளப்பறிய நோக்கங்கள் உண்டு. வாழ்தல் என்பது எளிதன்று. நேற்றும் துன்பம், இன்றும் துன்பம், நேற்றம் தோல்விகள், இன்றும் தோல்விகள், நேற்றும் சாதிச் சண்டைகள், இன்றும் சாதிச் சண்டைகள், இரண்டாயிரம் ஆண்டு காலமாக தனிமனித நிலையிலும், சமுதாயப் பொதுநிலையிலும்